# போர் நிறுத்தம் மீது படை அதிகாரிகள் நாட்டம்!


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 03 இதழ் 127
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-6-1994


(கொழும்பு)

இராணுவ உயர் அதிகாரிகளும் அரசாங்க உயர் அதிகாரிகளும் போர் நிறுத்தம் செய்யப்பட்டு சமாதானம் ஏற்படுவதையே பெரும்பாலும் விரும்புகின்றார்கள்" இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இதுபற்றி அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்: நான் கொழும்பில் தங்கியிருந்த நாட்களில் என்னை சந்தித்த இராணுவ அதிகாரிகள்

(2 ம் பக்கம் பார்க்க)

## தமிழ் - சிங்கள மக்களை போர் பாதிக்கிறது

### - தர்மசிறி சேனநாயக்க

(கொழும்பு)

நாட்டின் இனப் பிரச்சினையைத் தீர்க்க அரசியல் தீர்வு ஒன்றைக் காணாது அரசு அலட்சியமாக நடந்து கொள்வதால் வடபகுதி மக்களும் மற்றும் தென் பகுதி சிங்கள மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான செயலர் தர்மசிறி சேனநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

# மதவாச்சியில் புலிகள் அதிரடி

# மூன்று பொலிஸார் உயிரிழப்பு!

## காவலரண் அழிப்பு; பெருமளவு ஆயுதம் மீட்பு!!

(கொழும்பு)

மதவாச்சி கெபிதிகொல்லாவ பகுதியில் விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர். ஐந்து பொலிஸார் காயமடைந்தனர். எட்டுப்பேர் காணுமல் போயுள்ளனர். காவலரண் ஒன்றும் முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் அங்கிருந்து பத்து லட்சம் ரூபா பெறுமதியான ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## ஜ. ஐ. தே. முன்னணியின் வருடாந்த மாநாட்டுக்கு நீதிமன்று தடை உத்தரவு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரேமச்சந்திர குழுவினரால் எதிர்வரும் 18ம் திகதி முதல் 24ம் திகதி வரை நடாத்தப்படவிருந்த முன்னணியின் வருடாந்த மாநாட்டுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை விதித்துள்ளது. எதிர்வரும் 30ம் திகதி வரை இந்தத் தடை உத்தரவு செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தடை உத்தரவு சம்பந்தமான மனுவை திரு. ஆர். இ. குணரட்ன நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். இ

## இன்று விசேட படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

[illegible] - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை விசேட சேவையாக நடைபெறும்.

நாளை சனிக்கிழமை வழமையான சேவை வழமையான நேரத்துக்கு நடைபெறும் எனவும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

# சமாதான கோரிக்கையை அரசு நிராகரித்து வருகிறது

### - தமிழ்ச்செல்வன் பேட்டி

(லண்டன்)

"யுத்த நிறுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் நாம் தயாராகவே உள்ளோம் என்பதை பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறோம். கடந்த மூன்று வருடங்களாக யாழ்ப்பாணம் வந்த சமாதானத் தூதுக்குழுக்களிடம் எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம். ஆனால் ஸ்ரீலங்கா அரசோ சமாதானத்துக்கான எமது கோரிக்கைகளை நிராகரித்து வருகின்றது.

விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனை அண்மையில் பி பி ஸி யின் இலங்கை முகவர் ஜோர்ஜ் ஆர்னி பேட்டிகண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

# போரில் வெல்ல முடியாதென அரசும், ராணுவமும் உணர்கிறது!

### பி. பி. ஸி. சந்தேசிய பொறுப்பாளர் பேட்டி

(யாழ்ப்பாணம்)

"வடக்கு கிழக்கு யுத்தத்தில் வெல்ல முடியாதென்பதை அரசாங்கமும் ராணுவமும் சிங்கள மக்களும் உணர்ந்து விட்டனர். ஆகவே தற்போது பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சிறந்த தருணமாகும்" என்று யாழ். வந்துள்ள பி. பி. ஸி. சிங்கள 'சந்தேசிய' சேவையின் பொறுப்பாளர் திரு. ம வசந்த ராஜா தெரிவித்துள்ளார்.

இது தேசத்தின் எதிர்பார்க்கும் காலம். தென்மாகாண சபையில் ஒரு வழியை கடைப்பிடித்த அரசு அந்த வழிமுறை தோல்வியென்பதை உணர்ந்து கொண்டதினால் தன் போக்கையும் மாற்றிக்கொண்டுள்ளது.

சிங்கள மக்களின் மனம் வெகுவாக மாறிவிட்டது. அவர்கள் போரை வெறுக்கிறார்கள். போர் நிறுத்தப்படவேண்டும் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே அதிகமானோரின் விருப்பம்.

(2ம் பக்கம் பார்க்க)

## மயான சாம்பல் மூலம் சீமெந்து உற்பத்தி

(சிங்கப்பூர்)

மயானங்களிலிருந்து சேகரிக்கும் சாம்பல்களை சீமெந்து உற்பத்திக்கு பாவிக்க முடியுமென்று சிங்கப்பூர் கண்டுபிடித்துள்ளது.

சீமெந்து உற்பத்திக்கு இந்த சாம்பல்களை பாவிக்க முடியுமா? என மேற்கொண்ட ஆராய்ச்சி பெரும் வெற்றியளித்துள்ளதனால், தற்போது சிங்கப்பூரில் உள்ள அனைத்து மயானங்களிலும் இருந்து சாம்பல்கள் சேகரிக்கப்பட்டு, சீமெந்துத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு சீமெந்து உற்பத்தி செய்யப்படுகிறது

இந்த சாம்பலை உபயோகிப்பதன் மூலம் சீமெந்து உற்பத்தியில் செலவில் 20 சத வீதத்தைக் குறைக்க முடியுமென தெரிக்கப்பட்டுள்ளது. வீ-இ

## காமினி - றெனி இன்று அமைச்சர்களாக நியமனம்?

(கொழும்பு)

திரு. காமினி திஸநாயக்காவும், திரு. றெனி டி. மெல்லும் காமினி ஜயவிக்கிரமபெரேராவும் இன்று புதிய அமைச்சர்களாக பதவி ஏற்பார்கள் என்று தெரியவருகிறது.

திரு. காமினி திஸநாயக்கா மகாவலி அபிவிருத்தி அமைச்சராகவும் திரு. றெனி டி மெல் துறைமுக அதிகாரசபை அமைச்சராகவும் நியமிக்கப்படலாமென்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. வீ-இ

## பெஸ்டஸ் மீண்டும் கடற்றொழில் அமைச்சர்?

(கொழும்பு)

பொதுநிர்வாக மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மீண்டும் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்படுவார் என தெரியவருகிறது. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இன்று அமைச்சரவையில் சில மாற்றங்களைச் செய்யவுள்ளதாகவும் அதில் திரு. பெஸ்டஸ் பெரேராவுக்கு கடற்றொழில் அமைச்சர் பதவி கிடைக்கவுள்ளதாகவும் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

